பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்


07.06.2017 - மலர் 14, இதழ் 15





# பாடசாலை சஞ்சிகை அமைக்கும் விதம்

விலை ரூபா 15/-



## தொடர்பாடலைத் துண்டித்த சூரியத் தீப்பிழம்பு



## உயிரைக் காத்திடப் போராடும் சிறுவன்



## பறக்கும் தட்டு அண்டார்க்டிகாவில் வீழ்ந்ததா?

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பறக்கும் தட்டொன்று அண்டார்க்டிகாவில் விழுந்துள்ளதா ?

பறக்கும் தட்டின் பாகம் என்று கூறப்படும் பொருள்



**அண்டார்க்டிகாவில் பறக்கும் தட்டொன்று நொருங்கி விழுந்ததற்கான ஆதாரங்களை தம்மால் கண்டுபிடிக்க முடிந்துள்ளதாக வேற்றுக்கிரக உயிரினங்கள் குறித்து நம்பிக்கை கொண்டுள்ள ரஷ்யர் ஒருவர் கூறியுள்ளார்.**

ரஷ்யாவைச் சேர்ந்த வெலென்டின் டெஜ்டரோவ் எனும் நபரே, இதனை தெரிவித்துள்ளார். எனினும், இவரது கருத்துக்கள் குறித்து பெரும்பாலானோர் கேலி செய்கின்றபோதிலும், அது குறித்து மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று பறக்கும் தட்டு மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் குறித்து நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நவீன தொழில்நுட்ப வசதி

செய்மதி மற்றும் நவீன தொழில்நுட்ப வசதி மூலம் சாத்தியப்படுகின்ற கூகிள் ஏர்த் செய்மதி புகைப்படத்தைப் பார்த்த பின்னரே, அண்டார்க்டிகா பகுதியில் பறக்கும் தட்டொன்று நொருங்கி விழுந்திருப்பதாக டெஜ்டரோவ் கூறியுள்ளார். அவ்வாறு நொருங்கி விழுந்த பறக்கும் தட்டின் பாகங்களை அண்டார்க்டிகாவின் தென் பகுதியில் அமைந்துள்ள பனி மலைத்தொடரிலேயே டெஜ்டரோவ் அவதானித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## பறக்கும் தட்டின் பாகம்

டெஜ்டரோவ் அவதானித்துள்ள பறக்கும் தட்டின் பாகமொன்று 1900 அடி நீளத்திலும் மேலானது எனக் கூறப்படுகின்றது. கூகிள் ஏர்த் செய்மதி புகைப்படம் ஊடாக





இந்த பாகம் மிகவும் தெளிவாக காட்சியளிப்பதாக கூறப்படுகின்றது. இது குறித்த வீடியோ காட்சியையும் டெஜ்டரோவ் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்த வீடியோ காட்சிகளை இதுவரை ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர். ஆனால், இது ஓர் அசாதாரண நிலவுருவம் என்றும் வேற்றுக்கிரகவாசிகளின் பறக்கும் தட்டின் பாகமாக இது இருக்க முடியாது என்றும் பறக்கும் தட்டு மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் குறித்து நம்பிக்கை கொள்ளாதோர் கூறுகின்றனர்.

இது குறித்து டெஜ்டரோவ் கருத்துத் தெரிவிக்கும்போது, ''இது வேற்றுக்கிரகவாசிகளின் பறக்கும் தட்டேதான். மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் இந்த பறக்கும் தட்டு அண்டார்க்டிகாவிலுள்ள பனி மலைத்தொடர்மீது விழுந்திருக்கலாம். இன்றளவில் அந்த பனி மலை உருகிச் செல்கின்றது. இதன் பின்னர்தான் பறக்கும் தட்டின் பாகங்கள் தெளிவாக தெரிய ஆரம்பித்துள்ளன'' என்றார்.

## வேற்றுக்கிரகவாசிகள்

பறக்கும் தட்டுக்கள் மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் குறித்து காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட தகவல்கள் கிடைக்கின்ற பொழுதிலும் வேற்றுக்கிரகவாசிகள் எமது பூமிக்கு வருகை தருகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதியான சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (-அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அருகாமையில் போதை மாத்திரை விற்பனை...?

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை மாத்திரை பாவனையை ஏற்படுத்துவதற்கு சில குழுவினர் செயற்பட்டு வருவதாக போதைவஸ்து தடுப்புப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

மாணவர்களின் மனதை கவரும் வடிவமைப்பில்

**அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை**



பல வர்ணங்களிலான சின்னஞ்சிறிய போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், பாடசாலைக்கு அருகாமையில் உள்ள கடைகளை அண்டிய பகுதிகளிலேயே ரகசியமாக போதைவஸ்து மாத்திரைகள் விற்கப்படுவதாகவும் இந்த போதை மாத்திரைகளை பாவிப்பதன்மூலம் ஞாபகசக்தி குன்றல், உணர்வு மங்குதல், தடுமாற்றம், பதற்றம், தூக்கமின்மை, மன அழுத்தம் போன்ற பல பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் போதைவஸ்து தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. இதன் தாக்கத்தால் நுரையீரல், சிறுநீரகம், மூளை ஆகியவற்றில் பாதிப்புகள் ஏற்பட்டு புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போதை மாத்திரைகளை பயன்படுத்தியுள்ளவர்கள் இரவில் நித்திரையின்றி இருப்பதுடன், காலையிலேயே அதிக நேரம் உறங்குவார்கள் எனவும், அதிக கோபம், கணினி விளையாட்டுக்களில் அதிக ஆர்வம் காட்டுதல், வீட்டில் உள்ளவர்களிடம் எப்போதும் பணம் கேட்டு தொந்தரவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் காணப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய உணர்வுகளை அல்லது செயற்பாடுகளை பிள்ளைகள் வெளிப்படுத்தினால், அவர்கள் தொடர்பில் அதிக கவனத்தை செலுத்தி இத்தகைய தீய பழக்கங்களில் ஈடுபட்டுள்ளனரா? என்பதை ஆராயுமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


வெல்லுங்கள் மாதம் ஒரு சைக்கிள்!



14 ஆம் வருடத்தை முன்னிட்டு

விஜய்

**நீங்கள் செய்ய வேண்டியது**

இந்த மாதத்திற்கான விஜய் பத்திரிகைகளில் வெளிவருகின்ற 'மாதம் ஒரு சைக்கிள்' கூப்பன்களை சேகரித்து அவற்றை ஒன்றிணைத்து மாத இறுதியில் எமக்கு தபாலிடுங்கள். குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு வெற்றிப் பரிசாக சைக்கிள் வழங்கப்படும்.

**விஜய் மாதம் ஒரு சைக்கிள்**

மாதம்: ஜூன்
திகதி: 07.06.2017

பெயர் : ..............................
ஆண்/பெண் : ..............................
முகவரி : ..............................
..............................
தொ.பே.இல : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................

பரிசை நேரில் பெற்றுக்கொள்வேன் என உறுதிப்படுத்துகிறேன்

..............................
கையொப்பம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது



விஜய் Vijey

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
பெக்ஸ்: 011-2479652


# சா/தர பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு!

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

க.பொ.த. (சா/த) 2017 பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி மே மாதம் 31 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தைக் கருத்திற் கொண்டே இத்திகதி நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கம்பன் விழா யாழ். நல்லூரில்...




இந்த வருடத்திற்கான 'கம்பன் விழா' யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெறவுள்ளது. ஜூன் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை இந்நிகழ்வுகள் நடைபெறும். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை அகில இலங்கை கம்பன் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

காலை, மாலை என இருவேறு நேரங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறவிருப்பதுடன், அதற்கமைய காலை நிகழ்வுகள் நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்திலும், மாலை நிகழ்வுகள் ஸ்ரீ துர்க்கை அம்மன் மணிமண்டபத்திலும் நடைபெறும். பாடசாலைகள் தமது மாணவர்களை இவ்விழாவில் பங்குபெற வைக்க விரும்பினால் 0772935509 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவர் நட்பு



வேடன் ஒருவன் ஒரு நாள் விஷம் தடவிய அம்பு ஒன்றை ஒரு மானின் மீது எய்தான். அந்த அம்பு குறி தவறி ஒரு மரத்தின்மீது பட்டதால், மரம் இறந்துபோகத் தொடங்கியது. இதனால் அம்மரத்தில் கூடு கட்டி வாழ்ந்த பறவையினங்கள் வேறு மரங்களைத் தேடிச் சென்றன. ஆனால் அம்மரத்தில் வாழ்ந்த பஞ்சவர்ணக் கிளியொன்று மட்டும் வேறு இடமெங்கும் செல்லாது அம்மரத்தின் பொந்தில் தங்கியது. இதனைக் கண்ட ஏனைய பறவையினங்கள் இங்கிருந்து வெளியேறுமாறு கூறின. எனினும் தன் முடிவை மாற்றிக் கொள்ளாத பஞ்சவர்ணக் கிளி அங்கேயே வாழ்ந்தது.

ஒருநாள், அந்த வழியாகச் சென்ற தேவதை ஒன்று மரத்தின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டது. அத்தோடு, அம்மரத்தின் பொந்தில் கிளியொன்று இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டது. அதன் அருகில் சென்று, ''கிளியே! இந்த மரம் இன்னும் சில நாட்களில் முற்றாக இறந்துவிடும், உனக்கும் உண்பதற்கு எந்த உணவும் கிடைக்காமல் போய்விடும், நீ வேறு மரம் தேடிப் போகாமல் இங்கேயே இருக்கிறாயே ஏன்?'' என்று கேட்டது.

அதற்கு கிளி, ''வணக்கம், தேவதையே! நான் இந்த மரத்தில்தான் பிறந்தேன், இந்த மரத்தில்தான் வளர்ந்தேன், இந்த மரம்தான் எனக்கு உண்பதற்கு நல்ல கனிகளைக் கொடுத்ததோடு, என்னை என் எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றியது. இன்று இது கஷ்டத்தில் இருக்கும்போது, நான் எப்படி இதைவிட்டு என் இன்பத்தை மட்டும் நாடிப் போவேன்! இந்த மரத்தில்தான் நான் இன்பத்தைக் கண்டேன். ஆகவே இந்த மரத்தை விட்டுப் போ என்று ஏன் எனக்குத் தவறான புத்திமதியை கூறுகின்றீர்கள்?'' என்று கேட்டது.

**நன்மை பயக்கும்போது, மட்டுமல்லாது துன்பமான நேரத்திலும் நண்பர்கள் துணையாக இருக்கவேண்டும்.**

கிளியின் நன்றியுணர்ச்சியையும் நட்பின் ஆழத்தையும் கண்டு தேவதை மிக்க மகிழ்ச்சியடைந்து. ''நண்பர்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். நன்மை பயக்கும்போது, மட்டுமல்லாது துன்பமான நேரத்திலும் துணையாக இருக்க வேண்டும். உன் நட்பைக் கண்டு அகம் மகிழ்ந்தேன் கிளியே... நீ கேட்கும் வரத்தை என்னால் தரமுடியும் உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டது.

''எனக்கு ஒன்றும் வேண்டாம், இந்த மரம் பழைய நிலைக்கு வந்து அனைத்து விலங்கினங்களுக்கும் நல்ல கனிகளைத் தரவேண்டும்'' என்று வேண்டிநின்றது. தேவதையும் கிளியின் எண்ணத்தை நிறைவேற்றிவிட்டு அங்கிருந்து விடைபெற்றது.

# தகுதியறிந்து உதவி செய்



மனிதன் ஒருவன் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு புதர் தீப்பற்றி எரிவதையும் புதருக்குள்ளிருந்து ஒரு பாம்பு, ''என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்துவதையும் பார்த்தான். உடனே, அந்த மனிதன் தன்னிடமிருந்த பை ஒன்றை எடுத்து அந்த பாம்பு இருந்த புதருக்கு அருகில் போட அந்த பாம்பும் அந்த பைக்குள் நுழைந்தது. உடனே அதனை நெருப்பில் இருந்து வெளியே எடுத்துவிட்டான் அந்த மனிதன்.

அதன் பின்னர் பாம்பைப் பார்த்து, ''நான் உன் உயிரைக் காப்பாற்றியதற்கு நீ நன்றி சொல்லத் தேவையில்லை மாறாக என்னைக் கடிக்காமல் இருந்தால் போதும்'' என்றான்.

ஆனால் அந்தப் பாம்பு, ''இல்லை, இல்லை, நான் உன்னைக் கடிக்கத்தான் போகிறேன், மனிதனைப் போன்ற நன்றியற்ற மிருகம் வேறு கிடையாது'' என்று கூறிக் கொண்டே அந்தப் பாம்பு அவனைக் கடிக்கப் பாய்ந்தது. அதற்கு அந்த மனிதன் ''சற்றுப் பொறு இரண்டு பேரிடம் இது குறித்து விசாரிப்போம், அவர்கள் மனிதன் நன்றியற்றவன்தான் என்று சொன்னால் நீ என்னைக் கடித்துக் கொல்லலாம்'' என்றான். பாம்பும் சரியென்று ஒப்புக்கொள்ள, இருவரும் புறப்பட்டு முதலில் ஒரு மரத்தை சந்தித்தார்கள்.

அந்த மனிதன் மரத்தைக் கண்டு, ''இனிய கனிகள் தரும் மரமே, இவ்வுலகில் வாழும் மனிதர்கள் நன்றியற்றவர்களா என்று கூறமுடியுமா?'' என்ற கேட்டான். அதற்கு அந்த மரம், ''மனிதர்கள் நன்றி கெட்டவர்கள்தான், நான் மனிதர்களுக்கு எத்தனையோ கனிகளைக் கொடுக்கிறேன் இருந்தும் அவர்கள் என்னை வெட்டித் தீயில் வைத்து எரிக்கின்றார்கள்'' என்றது.

உடனே பாம்பு மனிதனைப் பார்த்தது. ''அவசரப்படாதே! இன்னொருவர் மீதமாக உள்ளார் அவரிடமும் இது குறித்து விசாரிப்போம்'' என்றான். இதனால் சிறிது தூரம் பயணித்து அவர்கள் ஒரு நரியைக் கண்டார்கள். மரத்திடம் கேட்ட அதே கேள்வியை நரியிடமும் கேட்டான் மனிதன்.

இதனைக்கேட்ட நரி, ''மனிதன் பாம்பைக் காப்பாற்றினான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இந்தச் சிறு பைக்குள் பாம்பு எப்படி நுழைந்திருக்க முடியும்!'' என்று கேட்டது. அதற்கு பாம்பு, ''நீ என்ன அப்படிச் சொல்கிறாய்! இதோ, நான் நுழைந்து காட்டுகின்றேன் பார்!'' என்று கூறி பைக்குள் நுழைந்தது பாம்பு. உடனே, நரி மனிதனிடம் பையை மூடும்படி கண் ஜாடை காட்டியது. உடனே மனிதனும் பையிலிருந்த சுருக்கு கயிற்றால் பையின் வாயைக் கட்டிவிட்டான்.

அப்போது நரி ''என்னுடைய தீர்ப்பு என்னவென்றால், இந்த நன்றி கெட்ட பாம்பை மனிதனே நீ கொல்லவேண்டும் என்பதுதான். மனிதனே! தீயவர்கள் சகவாசம் எவ்வளவு கெடுதல் என்பதை இனியாவது நீ தெரிந்து கொள்'' என்று கூறிவிட்டு நரி காட்டை நோக்கி ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனாலிசா பற்றிய சுவாரஸ்யங்கள்!




16 ஆம் நூற்றாண்டில் லியனாடோ டாவின்சி வரைந்த ஓவியமே மொனாலிசா ஆகும். பொப்லர் ஆடை (துணி) ஒன்றின்மீது எண்ணெய் வர்ணத்தினால் இது வரையப்பட்டிருந்தது. 'லாஜியோ கொண்டா' என்றும் இந்த மொனலிசா ஓவியத்தை அழைக் கின்றனர். 1503-1517 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த ஓவியம் வரையப்பட்டதாக கருதப்படுகின்றது.

## மொனாலிசா பிரான்சிய அரசின் வசம்


அக்காலத்தில் இத்தாலியின் ஃபுலோரன்ஸ் நகரில் வாழ்ந்த பெரும் செல்வந்தர் ஒருவரின் மனைவியின் உருவமே இவ்வாறு வரையப்பட்டது. தனது புதிய வீட்டின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததையும் தனது இரண்டாவது மகனின் பிறந்தநாளைக் கொண்டாடும் முகமாகவும் தனது மனைவியின் உருவத்தை ஓவியமாக வரையும்படி அச்செல்வந்தர் லியனா டோ டாவின்சியிடம் கேட்டுக்கொண்டார். **1503-1504** காலப்பகுதியில் டாவின்சி அவர்களால் ஓவியம் வரையும் பணி ஆரம்பமாகியது. எனினும், இதற்கிடையில் **1516** ஆம் ஆண்டு பிரான்சிய மன்னரின் அழைப்பின் பேரில் அவருக்கு பிரான்சிற்கு செல்லவேண்டி ஏற்பட்டது. இப்பயணத்தின் போது அவர் மொனாலிசா ஓவியத்தையும் பிரான்சிற்கு கொண்டு சென்றார். காலப் போக்கில் டாவின்சியின் மரணத்தின் பின்னர் மொனாலிசா ஓவியம் உள்ளிட்ட வேறு பல ஓவியங்கள் அவரின் உதவியாளர் ஒருவரின் வசமாகியது. பிரான்சிய மன்னன் அவரிடம் இருந்து இந்த படைப்பை விலை கொடுத்து வாங்கியதன் விளைவாக இவ் ஓவியம் பிரான்சிய அரசின் வசமாகியது.

## மொனாலிசா காணாமல் போனாள்

**1911** ஒகஸ்ட் **11** ஆம் திகதி முழு பிரான்ஸ் நாடும் பெரும் அல்லோல கல்லோலப்பட்டது. லுவர் அருங்காட்சியகத்தில் இருந்த மொனாலிசா ஓவியம் தொலைந்து போனதே அதற்கு காரணமாகும். எவ்வளவு தேடியும் மொனாலிசா குறித்து எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. எனினும், இரு வருடங்கள் கழித்து **1913** இல் இத்தாலியர் ஒருவர் அவ் ஓவியத்தை இத்தாலிய அருங்காட்சியகம் ஒன்றிற்கு விற்பதற்கு முயற்சி க்கையில் கைது செய்யப்பட்டார். அவர் லுவர் அருங்காட்சியகத்தின் ஊழியருமாவார். மொனாலிசா ஓவியம் இத்தாலிக்குச் சொந்தமானது என்பதே பெரும்பாலான




இத்தாலியர்களின் கருத்தாகும். அதனால், மொனாலிசா ஓவியத்தை திருடிய அந்த இத்தாலிய நபர் இத்தாலி நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றார். எனினும், அவர் 5 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டது.



## மொனாலிசாவுக்குள் மறைந்திருந்த மற்றொரு ஓவியம்

இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட பிரான்சிய ஆய்வாளர் ஒருவர் மொனாலிசாவுக்குள் மறைந்திருந்த மற்றொரு ஓவியத்தை கண்டுபிடித்தார். பெஸ்கல் கொட்டே எனும் இந்த ஆய்வாளர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், தனக்கு இக்கண்டுபிடிப்பிற்கு சுமார் **10** வருடங்கள் எடுத்ததாக தெரிவித்துள்ளார். ஒளித்தெறிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர் இந்த கண்டுபிடிப்பை மேற்கொண்டார்.



## மொனாலிசாவின் கண்கள் பேசும்

ஓவியம் குறித்த வரலாற்றாசிரியரான காலாக்லோரி அம்மை யாரின் கருத்தின்படி மொனாலிசா தனது கண்களின் மூலம் ஏதோ ஒன்றைக் கூற முயற்சிப்பதாக கூறுகின்றார். அந்த நினைவூட்டலின் காரணமாக. தனக்கு சில எழுத்துக்களையும் இலக்கங்களையும் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்ததாக அவர் கூறினார்.

## மொனாலிசாவுக்குள் டாவின்சி

லியனாடோ டாவின்சியின் தாடியையும் தலை மயிரையும் நீக்கினால் டாவின்சியின் உருவமே மொனாலிசா ஓவியத்தில் காணப்படும். நூற்றுக் கணக்கான வருடங்களுக்குப் பின் உலகில் ஆண்களும் பெண்களும் சமத்துவமாக கருதப்படும் யுகம் ஒன்று உருவாகும் என அவர் மானசீகமாகக் கருதியே தன்னையே மொனாலிசாவுக்குள் ஓவியமாக தமது உருவத்தை தீட்டினார் என்றும் அனுமானிக்கப்படுகின்றது.

-ஜெயகர்

noolaham.org | aavanaham.org

வயது வருடங்களில்

100,000 | 80,000 | 15,000 | 6,000

மேற்குலகினர் மனிதனின் ஆயுட்காலம் 72 ஆண்டுகள் வரை என்று பொதுவாக நம்புகின்றனர். ஆனால் உலகில் வாழும் பல ஜீவராசிகள் (குறிப்பாகத் தாவரங்கள்) ஆயிரம் ஆண்டுகள் வரை வாழும் அதிர்ஷ்டத்தினைப் பெற்றுள்ளன.

ஸ்பெயின் நாட்டிற்கு அருகாமையில் உள்ள ஒரு தீவில் கடலில் காணக்கிடைக்கும் ஒருவகை 'கடற்புற்கள்' நூற்றாண்டுகள் வரை வாழ்கின்றன. அத்துடன் 184 ஆண்டுகள் வரை வாழும் ஆமையும் உலகில் உள்ளது. உலகில் வாழும் இந்த அதிர்ஷ்டசாலிகளைக் கண்டுகளிப்பதற்கு உலகெங்கும் இருந்து பலர் வருகை தருகின்றனர். இவ்வாறு நீண்ட காலம் வாழும் மரங்கள் மற்றும் உயிரினங்களில் 12 இனங்கள் குறித்து இங்கு விபரங்கள் தரப்பட்டுள்ளன.



## பென்டோ ராட்சதர்கள் (Pando Giants)

அமெரிக்காவின் யுற்றா பிராந்தியத்தில் பிஸ்லேக் வனப்பகுதியில் பென்டோ என்று அழைக்கப்படும் மரங்கள் உள்ளன. சுமார் 80 ஆயிரம் ஆண்டுகளாக இந்த மரங்கள் உள்ளன. 106 ஹெக்டேயார் பரப்பளவில் பரவியிருந்த இந்த மரங்கள் துரதிர்ஷ்டவசமாக இன்று அழிந்து வருவதாக அமெரிக்க தாவரவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கடும் வரட்சி, பூச்சிகளின் தொல்லை பூஞ்சணம் மற்றும் இம்மரத்தின் இலைகளை பூச்சியரித்தல் இதற்கு காரணமாக உள்ளன.





## கடற்புற்கள் (seagrass)

ஸ்பெயினுக்கு அருகாமையில் உள்ள பெல்டிக் தீவுகளின் ஆழ்கடற்பகுதியிலேயே, இந்த கடற்புற்கள் உள்ளன. உலகின் மிகவும் பழமை வாய்ந்த உயிரினமாக இதனை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவை ஒரு லட்சம் ஆண்டுகள் வரை பழமை வாய்ந்தது. 10 மைல் கடற்பரப்பு வரை விஸ்தீரணம் கொண்ட இந்த புல் மைதானத்தினை பார்வையிட உலகெங்கிலும் இருந்து பல சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனை உண்மையான தாவர இனமாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். அதாவது, இவற்றில் பூக்களும் காய்களும் உருவாகின்றன.



## எரிமலை பாசி (Volcano sponge)

அன்டாட்டிக்கா மெகுமுடோ பனி ஆற்றின்கீழ் உள்ள ஆழ்கடல் பகுதியில் இந்த ராட்சத எரிமலை பாசிகளைக் காண முடியும். இவை 15 ஆயிரம் ஆண்டுகள் வரை பழமை வாய்ந்தது என்று கருதப்படுகின்றது. பாசி என்று கூறப்பட்டாலும் இவை முள்ளந்தண்டு அற்ற கடல் வாழ் உயிரினமாகும். மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். 6.5 அடி மற்றும் 4.5 அடி அகலம் வரை இவை வளர்கின்றன. 100 அடி ஆழ் கடல் பகுதியில் குளிர்மையான காலநிலையில் இவை வாழ்வதால் இவற்றின் செயற்பாடுகள் மிகவும் மெதுவாகவே நடைபெறுகின்றன என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இதனா[illegible] இவை நீண்ட ஆயுட் காலத்தினைப் பெற்றுள்ளன.



## முஜா அலிகேட்டர் (Muja the Alligator)

சேர்பியாவின் பெல்கிரேட் விலங்குகள் பூங்காவில் முஜா என்ற இந்த அலிகேட்டர் முதலை வசிக்கின்றது. இந்த விலங்கியல் பூங்காவில் வசிக்கும் மிகவும் வயதான முதலையாக 80 வயதான இந்த அலிகேட்டர் கருதப்படுகின்றது. 1937ஆம் ஆண்டு ஜேர்மனியிலிருந்து இந்த அலிகேட்டர் பெல்கிரேட்டுக்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## டுட்டாரா (Volcano sponge)

நியூஸிலாந்தினைச் சேர்ந்த 120 வயதான இந்த டுட்டாரா ஓணானுக்கு 'ஹரி' என்று பெயரிடப்பட்டுள்ளது. பிரித்தானியாவின் அரச குடும்பத்தினைச் சேர்ந்த இளவரசர் ஹரிக்கு கௌரவம் அளிக்கும் முகமாகவே இதற்கு இந்த பெயரிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு இளவரசர் ஹரி இந்த ஓணானை நேரடியாக கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

## பவுஸ்டா (Volcano sponge)



இது தான்சானியாவினைச் சேர்ந்த கறுப்பு நிற காண்டாமிருகமாகும். இவற்றின் ஆயுட்காலம் 50 ஆண்டுகளுக்கும் குறைவாகும். பெண் காண்டாமிருகமான இந்த பவுஸ்டாவின் வயது 54. கோரன்கோ சரணாலயத்தில் வாழும் இந்த காண்டா மிருகத்திற்காக, பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரிகளின் பாதுகாப்பும் அரவணைப்பும் அதற்கு குறைவின்றிக் கிடைத்து வருகின்றது.




54 | 80 | 120

வயது வருடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5,000

# உலகில் நீண்ட காலம் உயிர் வாழ்பவை




## சன்லேண்ட் பயோபெப் (Sunland Baobab)

அடன்சோனியா குடும்பத்தினைச் சேர்ந்த ஒரு மரம்தான் இந்த பயோபெப். மடகாஸ்கரிலும், ஆபிரிக்காவிலும் இவை உள்ளன. எனினும் ஒரு பயோபெப் இனம் அவுஸ்திரேலியாவிலும் உள்ளது. பண்டைய காலத்தில் அரேபிய வணிகர்கள் கொண்டு வந்து வளர்த்த பயோபெப் மரத்தினை இலங்கையிலும் காண முடியும். இந்த மரம் மன்னாரில் காணப்படுகின்றது. 6 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சன்லேன்ட் பயோபெப் மரத்தினை தென்னாபிரிக்காவின் லிம்போபோப் சன்லேன்ட் விவசாயப் பண்ணையில் காண முடியும்.



## ஸ்கொட்லாந்து யூ மரம் (The Fortingall Yew)

'யூ' என்பது ஐரோப்பியாவில் பரவலாக உள்ள ஒரு வகை மரமாகும். இதில் மிகவும் பழமையான மரம் ஸ்கொட்லந்தின் பர்த்சயன் போர்ட்டின்கோல் என்ற கிராமத்தில் உள்ளது. இந்த மரத்தின் வயது 5 ஆயிரம் ஆண்டுகள் என்று கருதப்படுகின்றது.




## ஸ்லோவேனியாவின் திராட்சைக் கொடி (The Old vine, Slovenia)

இந்த திராட்சைக் கொடிக்கு இப்பொழுது 400 வயது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஸ்லோவேனியாவின் மரிபோர் என்ற நகரில் இந்த திராட்சைக் கொடி காணப்படுகின்றது. இதில் இன்றும் திராட்சைகள் கிடைக்கின்றன. 'காய்கள் பூக்கும் மிகவும் பழமையான திராட்சைக் கொடி' என்று இந்த தாவரம் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.



## வோவேஸ் ஒலிவ் மரம் (Olive tree of Vouves)

கிரேக்க நாட்டின் கிறீட் தீவில் இந்த வோவேஸ் ஒலிவ் மரம் இருக்கின்றது. இன்றும் ஒலிவ் காய்கள் காய்க்கும் இந்த மரம் உலகின் மிகவும் பழமையான ஒலிவ் மரம் என்று கருதப்படுகின்றது. இம் மரம் சுமார் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரத்திற்கும் அதி கமான சுற்றுலாப் பயணிகள் இந்த ஒலிவ் மரத்தினை பார்வையிட வருகை தருகின்றனர்.



## ஜேர்மனின் ரோஜா புதர் (Rose of Hildesheim)

இந்த ரோஜா புதர் ஜேர்மனின் ஹில்டேஸ்ஹைம் தேவாலயத்தின் அருகாமையில் காணப்படுகின்றது. 33 அடி உயரமான ரோஜா புதரின் வயது ஆயிரம் வருடங்களாகும். இரண்டாவது உலகப்போரின்போது, இந்த தேவாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டது. இதன்போது ரோஜாப் புதருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் வேர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அதனால் இத்தாவரம் மீண்டும் புத்துயிர் பெற்றது.



## ஜொனதன் ஆமை (Jonathan the tortoise)

ஜொனதன் என்று அழைக்கப்படும் இந்த ராட்சத ஆமை 184 வயதானது. 19 ஆம் நூற்றாண்டில் சீசெலஸ் தீவிலிருந்து இந்த ஆமை சென் ஹெலனா தீவுக்கு கொண்டு வரப்பட்டது. சென் ஹெலனாவிலிருந்த ஆளுநருக்கு பரிசளிக்கும் முகமாகவே இந்த ஆமை கொண்டு வரப்பட்டது. இன்று அத்தீவில் வசிக்கும் மிகவும் வயதான உயிரினமாகவும் இந்த ஆமை கருதப்படுகின்றது. உலகின் வயதான ஆமையாகக் கருதப்படுவதும் இந்த ஜொனதன் ஆமையாகும்.

184 400 1,000 4,000

வயது வருடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## (பகுதி-I)

பெயர்: ..............................................

சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ 1, 2, 3, 4 ஆகிய வினாக்களில் உருவின் கோலத்திற்கு ஏற்ப கேள்விக்குறியினால் காட்டப்படும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிக.

01. 



1. 2. 3.

02. 


1. 2. 3.

03. 


1. 2. 3.

04. 


1. 2. 3.

★ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடை தருக.

05. திங்கட்கிழமை, வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, ...................., ....................

1. புதன்கிழமை, சனிக்கிழமை
2. செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை
3. புதன்கிழமை, வெள்ளிக்கிழமை

06. | 3 | 6 | 9 |  | 2 | 5 | 8 |  | 1 | 4 | 7 | ...............

1. | 0 | 2 | 5 |  2. | 0 | 3 | 6 |  3. | 0 | 3 | 5 |

07. அம்மா பழங்கள் வாங்குவதற்கு சந்தைக்குச் சென்றார். பிள்ளைகள் விளையாடுவதற்கு மைதானத்திற்கு சென்றனர். அம்மா பிள்ளைகள் எனின், சந்தைக்கு ....................................

1. பழங்கள் 2. விளையாடுவதற்கு 3. வாங்குவதற்கு


08. 1, 2, 3, 4, 5 ஆகியவற்றிற்கு முறையே A, B, C, D, E என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, விடையாக அமைவது எது?

```
  A C D
  B A A
  ─────
```

1. CDE 2. CED 3. CAD


09. தற்போது கமலனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரியின் வயதின் நான்கு மடங்காகும். கமலனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரியின் வயதில் இரு மடங்காகும்?

1. 16 2. 6 3. 12

10. 
அருகில் தரப்பட்டுள்ள திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்;

1. செவ்வகம் 2. சதுரம் 3. முக்கோணம்

★ A, B என்னும் இரு கிராமங்களுக்கிடையே உள்ள தூரம் 10km ஆகும். ஒரு நாள் முற்பகல் 8:00 இற்கு விமல் A யிலிருந்து புறப்பட்டு மணித்தியாலத்திற்கு 3km என்னும் வேகத்தில் B யை நோக்கிச் செல்கிறான். கமல் அதேநேரத்தில் B யிலிருந்து புறப்பட்டு மணித்தியாலத்திற்கு 2km வேகத்தில் A யை நோக்கிச் செல்கிறான் எனின்;




11. விமலும் கமலும் சந்திப்பது A யிலிருந்து

1. 3km 2. 6km 3. 5km

12. கமல் எத்தனை மணிக்கு B என்ற நகரத்தை அடைவான்?

1. ந.பகல் 12:00 2. பி.ப. 2:00 3. பி.ப. 1:00

13. ஒரே பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர், ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமம். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 8 2. 12 3. 32

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## (பகுதி-II)

(மே 31 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *08)* | *8. 3* | *11. 4* | *13. 4* | *15. 1* | *17. 3* | *19. 4* |
| | *9. 2* | *12. 3* | *14. 3* | *16. 1* | *18. 4* | *20. 2* |
| | *10. 4* | | | | | |

| | | | |
|---|---|---|---|
| *09)* | *01. 1.* நான்முகி | *2. 4* | *3. 6* |
| | *2.* ரூபா *220.00* | *3. 6000*ml அல்லது *6*l | |
| | *4.* மு.ப. *5:40* | *5. 38*cm | *6. 90* |

Digitized by Noolaham Foundation.

# உயிரைப் பாதுகாக்க விளையாட்டில் ஈடுபடும் 8 வயது சிறுவன்!




இவன் பாடசாலைக்குச் செல்லும் பருவத்தில் இருக்கும் சிறுவன். ஆனால், ஏனைய பிள்ளைகள் கல்வி கற்கும் அதேவேளையில் இவனோ கற்றலுக்குப் பதிலாக தனது உயிரைக் காத்துக்கொள்வதற்காக தினமும் ஓடுதல், நீச்சலடித்தல், சைக்கிளோட்டுதல் என தொடர்ச்சியாக ஈடுபட வேண்டியுள்ளது.

இவனது பெயர் ஜெக். வயது 8. பிறக்கும்போதே, ஹோமோன் மாற்றம் காரணமாக, இவனது உடல் வளர்ச்சியானது, வழமைக்கு மாறாக பல மடங்கு அதிகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இதனால், இவனது எடையும் அதிகரிக்கத் தொடங்கியது. உடல் எடை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக உணவில் கட்டுப்பாட்டை மேற்கொள்வதுடன், தினமும் உடற்பயிற்சியிலும் ஈடுபட வேண்டிய நிலைக்கு இவன் தள்ளப்பட்டுள்ளான்.





எனினும், எந்தவிதமான முயற்சிகளை மேற்கொண்டாலும் அவனது உடல் பருமன் அதிகரிப்பை மருத்துவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. உலகிலேயே இவ்வாறான நோய்க்கு உள்ளாகியிருப்பவர்கள் 100 இற்கும் குறைவாகும். இவர்களில் எவருமே 20 வயதைத் தாண்டி உயிர்வாழ்ந்ததில்லை. எனவே, ஜெக்கின் நிலைமை எப்படி அமையும் என்பது தொடர்பில் மருத்துவர்கள்கூட பதில் தெரியாமல் தடுமாறுகின்றனர்.

இத்தகைய நோயாளிகளின் உடலில் இடத்திற்கிடம் கட்டிகள் உருவாவதுண்டு. அவ்வாறே, ஜெக்கின் 'பிட்டம்' பகுதியில் அவ்வாறான ஒரு கட்டி உள்ளது. "ஓடுதல், நீந்துதல், சைக்கிளோட்டம் என பயிற்சிகளை எடுத்து வருவதால் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் ஜெக் உள்ளான். இது அவனது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதாக அமைவதுபோலவே ஏனைய பிள்ளைகளுடன் பழகுவதற்கும் அவனுக்கு நல்லதொரு வாய்ப்பாகவும் அமைகின்றது" என்று ஜெக்கின் தாயார் மருஸ்கா தெரிவித்துள்ளார்.

"ஓடுகிறான், ஆடுகிறான், விளையாடுகின்றான், டரம்ஸ் வாசிக்கின்றான். எல்லாம் செய்கிறான். ஆனால், அவன் என்றாவது சுகவீனப்பட்டுவிடுவானோ என்றுதான் பயமாக உள்ளது. ஏனென்றால், அவனுக்கு சாதாரண காய்ச்சல் ஏற்பட்டாலே சுகமடைவதற்கு அதிக நாட்கள் செல்வதுண்டு" எனவும் அவனது தாயார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

**Thoovaanam SMS செயற்படுத்தும் முறை**

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

இவ்வார கூப்பன் - 07.06.2017

விடை : ..............................

பெயர் : ..............................

முகவரி : ......................

தொ.பே.இல: ..............................

பாடசாலை : ..............................

..............................

கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
07.06.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

3 பரிசில்கள் போட்டி - 24.05.2017
விடை: ஹைட்ரஜன் ஹீலியம்
வெற்றியாளர்:
ப.மதுரிகா,
23, கச்சேரி வீதி,
கிளிநொச்சி.

Gift sponsored by:
www.srijob.com







How to ask Questions + Answers in English





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான முறையில் உணவு உண்ணக் கற்றுக்கொள்வோம்



உணவை உண்ணுதல் என்பது மனிதன் உயிர்வாழ்வதற்கு வேண்டிய மிக முக்கியமான நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையை சரியான முறையிலும், நமது கலாசாரத்துடன் இணைந்த வகையிலும் மேற்கொள்ளுதல் வேண்டும். பல நபர்கள் எத்தனை வயதாகியும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில், உணவை உண்ணும் வழக்கத்தை பின்பற்றக்கூடிய நிலையில் இல்லாதவர்களாகவே இருக்கின்றார்கள். அந்தவகையில், இவர்கள் உண்ணும் முறையைப் பார்க்கும்போது பலரையும் முகம் சுளிக்க வைக்கின்றது.

இலங்கையராகிய நாம் அரிசி மற்றும் அதுசார்ந்த உணவுப் பொருட்களையே பிரதான உணவாக உட்கொள்கின்றோம். இவ் உணவை உட்கொள்வதற்கு நாம் கைகளையே காலம் காலமாகப் பயன்படுத்தி வருகிறோம். எனினும், பிற நாட்டவர்கள் பலர் உண்ணும்போது கைகளைப் பயன்படுத்துவதில்லை. வேறு உபகரணங்களைக் கொண்டே வாயில் உணவை எடுத்து வைக்கின்றனர். எனவே, நாகரிகமான முறையில் உணவை உள்ளெடுக்கும் முறையை சிறு பராயம் முதல் நீங்கள் கற்றுக்கொள்வது அவசியமாகும்.


## விரல்களை மட்டும் பயன்படுத்துவோம்

உணவை உண்ணும்போது, விரல்களை மட்டும் பயன்படுத்தி உண்ண வேண்டும். சாப்பிடும்போதும், உணவைப் பிசையும்போதும் உள்ளங்கைவரை உணவு செல்லக்கூடாது.



## சரியான அளவில் உணவை எடுப்போம்

உணவை கைகளால் எடுத்து வாயில் வைக்கும்போது, சரியான அளவில் உணவை எடுக்க வேண்டும். ஏனெனில், தேவைக்கதிகமாக உணவை எடுத்து வாயில் வைக்கும்போது, வாயின் கொள்ளளவு போதாமல் உணவு வாய்க்கு வெளியே சிந்தும் நிலை ஏற்படும். இதனை பிறர் அவதானிக்கும்போது, உணவு உண்பவரைப்பற்றி தவறாக எண்ணும் நிலையும் ஏற்படும்.




## சற்றுக் குனிந்து உண்ணல்

உணவை உண்ணும்போது, சற்றுக் குனிந்து உண்ணுதல் வேண்டும். காரணம், அப்போதுதான் உணவுத் தட்டிற்கும் வாய்க்கும் இடையேயான இடைவெளி குறைந்து உணவு தேவையற்ற இடங்களில் சிந்துவதையும் தவிர்க்க முடியும்.



## மூடிய நிலையில் மெல்லுதல்

உணவை வாயில் வைத்தபின்னர், அதை வாயை மூடிய நிலையில் நன்றாக மென்று உண்ணல் வேண்டும். வாயை மூடிய நிலையில் மென்று உண்பதால் வாயிலிருந்து 'சவக் சவக்' என்ற அநாகரிகமான சத்தம் வராதிருக்கும். அவசர அவசரமாக உணவை மென்று உண்பதைவிட ஆறுதலாகவும், மெதுவாகவும் மென்று உண்ணுதல் சமிபாடடைய இலகுவாக இருப்பதுடன், செயலாகவும் தோன்றும்.



## வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்

உணவு உண்ணும்போது, உணவை உள்ளெடுத்தல் தொடர்பான சிந்தனையுடன் உணவை உள்ளெடுக்கும்போது சமிபாட்டுத் திறனும், உணவின் மீதான ஆர்வமும் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டோ அல்லது ஏதாவது ஒரு நூலைப் படித்துக்கொண்டோ உணவை உள்ளெடுப்பது மிகவும் தவறான செயலாகும்.



## தட்டுக் கீழ் விரிப்பை பயன்படுத்தல்

சாப்பாட்டு மேசையில் அமர்ந்து உண்ணும்போது, தட்டிற்குக் கீழே விரிப்பைப் பயன்படுத்துதல் சிறப்பானது. அப்போதுதான் உண்ணும்போது தேவையற்ற இடங்களில் தட்டை நகர்த்தாமல், முறையான இடத்தில் தட்டை வைத்து உண்ண முடியும்.



## சரியாக அமர்ந்து உண்போம்

உணவை உணவு மேசையில் அமர்ந்து உண்ணும்போது, கதிரையில் சரியான முறையில் அமர்வதுடன், இரண்டு கால்களையும் கீழே தொங்கவிட்டு, ஒரு கையை சாப்பாட்டு மேசையில் தட்டுக்கருகே வைத்துக்கொண்டு இன்னொரு கையைப் (வலக் கை) பயன்படுத்தி உண்ண வேண்டும். கீழே அமர்ந்து உண்ணும்போது, இரண்டு கால்களையும் மடக்கி சப்பாணி கொட்டி இருந்துகொண்டு ஒரு கையை கால்கள் மீது மடக்கி வைத்துக்கொண்டு மற்றைய கையால் (வலக் கையால்) சற்றுக் குனிந்த நிலையில் உணவை எடுத்து உண்ணல் வேண்டும்.



## சுத்தமே முக்கியம்

எதையும் உண்பதற்கு முன் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுதல் மிகவும் முக்கியமானது. இதேபோல் சாப்பாட்டுத் தட்டு, மற்றும் உணவு பரிமாறும் பாத்திரங்களின் சுத்தத்தையும் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.



**நாம் நமக்கு வேண்டிய உணவை நாகரிகமான முறையிலும், சரியான அளவிலும், நல்ல போசாக்கு நிறைந்த வகையிலும் உள்ளெடுத்து எங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்வோம்.**

ப.அருந்தவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விஜய் PLUS

# எச்சரிக்கையாக இருங்கள்

நீங்கள் வெளியில் செல்லும்போது அறிமுகமில்லாதவர்கள் உங்களை நெருங்கி வந்து உங்களைப் பற்றிய பின்வரும் தகவல்களைக் கேட்டால், அவற்றைக் கூற வேண்டாம்...!









துன்பப்படுபவர்களைக் கண்டால் அவர்களுக்கு உதவுங்கள்

# வெள்ளம் வற்றிய பின்னர் கவனம் செலுத்த வேண்டியவை

தேங்கியுள்ள நீரில் குளிக்கவோ, விளையாடவோ வேண்டாம்.



சரிந்துள்ள மரங்கள், கிளைகளுக்கருகில் செல்வதைத் தவிருங்கள்.



அறுந்து விழுந்துள்ள மின் கம்பிகளைத் தொடாதீர்கள்.





இக்காலத்தில் தொற்றுநோய்கள் பரவக்கூடும். எனவே, சுத்தமான / கொதித்தாறிய நீரையே அருந்துங்கள்.

வெள்ள நீர் பட்டுள்ள எந்தவோர் உணவுப் பொருளையும் உட்கொள்ளாதீர்கள்.

நன்கு சமைத்த உணவுகளை உட்கொள்ளுங்கள்.

பாம்பு, தேள், முதலை, அட்டை, பூச்சிகள் போன்ற தீங்கு விளைவிக்கக்கூடிய உயிரினங்கள் குறித்து அவதானமாக இருங்கள்.

நீர் தேங்கியுள்ள குழிகள் குறித்து அவதானமாக இருங்கள்.

பெரியவர்களின் அனுமதியின்றி மின்னுபகரணங்கள் மற்றும் மின் ஆளிகளை இயக்க வேண்டாம்.

எச்சரிக்கை குறிப்புகளை கவனத்தில்கொள்ளுங்கள்.

- நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






- என்னென்ன நிறங்களிலான ஆடைகள் உள்ளன?

..................................

- பொத்தான் பிடித்துத் தைக்கப்பட்டுள்ள ஆடைகள் எத்தனை உள்ளன?

..................................

- நீண்ட கையுடைய ஆடைகளின் நிறங்களைக் குறிப்பிடுக.

..................................

- இங்கு கூடுதலாக இருப்பது எவ்வகை ஆடைகள்?
  1. நீண்ட கையுடைய ஆடைகள்
  2. அரைக் கையுடைய ஆடைகள்




01. இந்த குளிர்சாதனப் பெட்டியில் காணப்படும் இரு பகுதிகளும் யாவை?

..................................

..................................

02. குளிர்சாதனப்பெட்டியில் இருந்து வெளியே எடுத்தால் உருகிவிடும் தன்மை கொண்டது எது?


..................................

03. சாதாரண குளிரூட்டல் பகுதியின் கீழ் தட்டில் இருப்பவை எவை?

..................................

04. பழரசமும் பழக்கலவையும் எந்தப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன?

..................................



வானில் .......................... ஒன்று பறக்கின்றது.
(பட்டம்/ விமானம்)

ரோஹித் .......................... செய்கிறான்.
(நித்திரை/ வீட்டுவேலை)





அம்மா .......................... தயாரிக்கின்றார்.
(உணவு/ தேநீர்)

வாகனம் ஓட்டும்போது தொலைபேசி பாவிப்பது

..........................
(நல்லது/கூடாது)



01. படத்தில் காட்டப்படுவது;
1. பாடசாலை சித்திரப் போட்டி
2. பாடசாலை விளையாட்டுப் போட்டி
3. பாடசாலை கட்டுரைப் போட்டி

02. இப்போட்டியில் எத்தனை பேர் பங்குபற்றியுள்ளனர்?

..................................



03. வெற்றியாளர்களுக்கு வழங்கப்படவுள்ள .................................. மேசை மீது வைக்கப்பட்டுள்ளன.
1. தொப்பிகள் 2. குளிர்பானங்கள்
3. வெற்றிக்கிண்ணங்கள்

04. வெற்றிக்கோட்டைத் தாண்டவுள்ள போட்டியாளரில் வட்டமிட்டுக் காட்டுக.

- ஜீநு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொதுநூலகம்



## படங்களுக்குரிய இலக்கங்களுக்கமைய உரிய கட்டங்களில் சொற்களை எழுதுக.

spider

turtle


lizard

cat

parrot

dog

rat






## விடை தருக

5 − 1 = ____

7 − 2 = ____


7 − 6 = ____

8 − 5 = ____

5 − 3 = ____



## குறுக்கெழுத்துப் போட்டி: 243



### மேலிருந்து கீழ்

1. எருமை கத்தும் ஓசை.
2. குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் இனிப்புப் பண்டம். (குழம்பியுள்ளது)
3. மழை இல்லாது போனால் இந்த நிலை ஏற்படும்.
5. பெண்களின் தலைமுடி. (குழம்பியுள்ளது)
7. சபித்தல். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. இயல், இசை, நாடகம் என்பவை.
4. நடப்பதற்கு உதவும் அவயவம்.
5. தற்காலிகமாக தங்குவதற்கு அமைக்கப்படுவது. (குழம்பியுள்ளது)
6. சொல். (மாறியுள்ளது)
7. அமைதி. (குழம்பியுள்ளது)

## தரவுக்கேற்ப அடையாளமிடுக

எடை கூடியதில் '✓' அடையாளமிடுக





எடை குறைந்ததில் '✓' அடையாளமிடுக





எடை குறைந்ததில் '✓' அடையாளமிடுக





எடை கூடியதில் '✓' அடையாளமிடுக









இங்கிருக்கும் எழுத்துக்களைக் கொண்டு குறைந்தது பத்து சொற்களையேனும் எழுதுக

## அறிவுக்கு விருந்து (24.05.2017) விடைகள்

### குறுக்கெழுத்துப் போட்டி: 242

| | | | | | |
|---|---|---|---|---|---|
| து[1] | ணி | வு | ■ | பு[2] | றா |
| ச் | ■ | ■ | க் | ■ | ர |
| ச[3] | ன் | ம[4] | ம் | ■ | யி |
| ம் | ர | த[5] | க | ■ | ம் |
| ■ | அ[6] | ம் | க | ■ | நூ[7] |
| தூ[8] | சு | ■ | பு[9] | ண் | ■ |










Digitized by Noolaham Foundation.







விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு

காத்தான்குடி பிஸ்மி இஸ்லாமிய பாடசாலையில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கல்விக் கண்காட்சி' அண்மையில் பிஸ்மி வளாகத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சி நிகழ்வில், கண்காட்சிக் கூடங்களை பிஸ்மி குழுமத்தின் தவிசாளர் அஷ்ஷெய்க் எம்.பி.எம். பிர்தௌஸ் (நளீமி) திறந்து வைத்தார். பிஸ்மி இஸ்லாமிய பாடசாலை மாணவர்களின் புத்தாக்க திறன்களை வளர்க்கும் நோக்கில் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகவே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- ஜே.எம்.பஹ்த்

# சுற்றும் பூமி நின்றுவிட்டால்...!!



**பூமி 1670 கி.மீற்றர் வேகத்தில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிக்கொண்டிருக்கின்றது. பூமி தன்னைத்தானே சுற்றும் சுழற்சியை திடீரென நிறுத்திக்கொண்டால் என்ன நடக்கும்? பல்வேறு பயங்கரமான வினோத நிகழ்வுகள் பூமியில் நிகழ ஆரம்பித்துவிடும்.**

அந்தவகையில், பூமியைச் சுற்றியுள்ள பாதுகாப்பு மண்டலம் செயல் இழந்து சூரியக் கதிர்கள் நேரடியாக பூமியைத் தாக்கும். இதனால், உயிரினங்கள் ஒரு நொடியில் அழிந்துவிடும். வானத்தில் நிறமாற்றங்கள் ஏற்படும். பூமியில் உறுதியாகப் பிணைக்கப்படாத பொருட்கள், உயிரினங்கள் கிழக்குத் திசை நோக்கி வீசப்படும். சூரியன் மேற்கில் தோன்றிக் கிழக்கில் மறையும், மிகப் பெரிய சுனாமி ஏற்படும்.


சில நிமிட நேரங்களில் தரைப்பகுதிகள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்படும். காற்று மண்டலத்தில் மிகப் பெரிய அழுத்தம் ஏற்பட்டு பாரிய கட்டடங்கள் காற்றில் அடித்துச் செல்லப்படும்.

இந்த அழுத்தமானது, பூமியில் உள்ள சகல அணுகுண்டுகளும் வெடிப்பதைவிட 100 மடங்கு அதிக சக்தியாகும்.


இத்தகைய பயங்கரமான வினோத நிகழ்வுகள் பூமி தனது சுழற்சியை நிறுத்தினால் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.



சு.திலிஸ்குமார்,
மொ/தன்னகும்புர தமிழ் கனிஷ்ட வித்தியாலயம்,
நமுனுகுல.



ஸியா உல் ஹக்,
சாஹிரா தேசிய பாடசாலை,
அநுராதபுரம்.



எஸ்.ரிஷிபிரகாஷ்,
சில்வெஸ்டர் கல்லூரி,
கண்டி.



வி.திஷான்,
ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயம்,
தலவாக்கலை.



எம். பவித்திரன்,
கே/ தெஹி/ பூனுகல தமிழ் வித்தியாலம்,
எட்டியாந்தோட்டை.




Digitized by Noolaham Foundation.

## அதிகளவு நீரை சமுத்திரத்தில் சேர்க்கும்

# அமேசன் நதி




தென் அமெரிக்க கண்டத்தின் வட பகுதியிலேயே அமேசன் நதி அமைந்துள்ளது. இந்த நதியின் பெரும்பகுதி பிரேசிலுக்கு சொந்தமாக உள்ளது. பல கிளை நதிகளினூடாக பெருமளவான நீரை சமுத்திரத்தில் சேர்க்கும் உலகின் ஒரே நதியாக அமேசன் நதி குறிப்பிடப்படுகின்றது. இதன் மொத்த நீளம் 64,00 கி.மீற்றர் ஆகும்.

அமேசன் நதி அட்லாண்டிக் சமுத்திரத்துடன் சங்கமிக்கும் முகத்துவாரப் பகுதி 240 கி.மீற்றர் அகலம் கொண்டது. இந்த நதியின் ஊடாக அட்லாண்டிக் சமுத்திரத்திற்கு கிடைக்கும் நீரின் அளவு செக்கனுக்கு 209,000 கன மீற்றர் ஆகும். 'உகயாலி' மற்றும் 'மெரனோன்' ஆகியவை இதன் பிரதான கிளை நதிகளாகும்.

அமேசன் நதியின் நீள அளவு குறித்து பல்வேறு கணிப்பீடுகள் உள்ளன. சில கணிப்பீடுகளின்படி, இதன் நீளம் 6,992 கி.மீற்றர் என்றும் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், அமேசன் நதியின் நீளத்தை துல்லியமாக கணக்கிட்டுக் கூற முடியாதுள்ளது. அவ்வாறே, இதன் கிளை நதிகளின் எண்ணிக்கை பற்றியும் துல்லியமாக கூற முடியாதுள்ளது. பிரேசிலின் ஊடாக பாய்ந்து செல்லும் பகுதியில் மட்டும் சுமார் 200 கிளை நதிகள் சேர்வதாகக் கூறப்படுகின்றது. இது தவிர; ஈக்வடோர், பொலீவியா, வெனிசுவெலா மற்றும் பெரு ஆகிய நாடுகளிலிருந்தும் கிளை நதிகள் அமேசன் நதியில் சேர்கின்றன. உலகின் மிகப்பெரிய மலைப்பாம்பு இனம், பயங்கரமான உயிரினமான எனகொன்டாக்கள், கொடிய மீன் இனமான பிரன்ஹா ஆகியவையும் அமேசன் நதியில் வசிக்கின்றன.

**'உலகின் மிகப்பெரிய மலைப்பாம்பு இனம், எனகொன்டாக்கள், கொடிய மீன் இனமான பிரன்ஹா ஆகியவையும் அமேசன் நதியில் வசிக்கின்றன'**



உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions | the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் ரவிக்கும் கமலுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

රවි: කමල්, ඉරිදට මොකද කරන්නේ?
கமல், இரிதட்ட மொகத கரன்னே?
ரவி: **கமல், ஞாயிற்றுக்கிழமை என்ன செய்வீர்?**

කමල්: විශේෂ දෙයක් නැහැ රවි. ඇයි?
விஷேஷ தெயக் நெஹெ ரவி. எய்?
கமல்: **விஷேசம் ஒன்றும் இல்லை ரவி. ஏன்?**

රවි: අපි ඉරිදා සවස මුහුදු වෙරළට යනවා. ඔයත් එනවාද?
அப்பி இரிதா சவச முஹுது வெரளட்ட யனவா.
ஒயத் எனவாத?
ரவி: **நாங்கள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் கடற்கரைக்குப் போகிறோம். நீயும் வருகிறாயா?**

කමල්: කවුරු කවුරුද යන්නේ?
கவரு கவுருத யன்னே?
கமல்: **யார் யாரெல்லாம் போகிறீர்கள்?**

රවි: අපේ ගෙදර අය යන්නේ. මාමාගේ පුතාත් යනවා.
අපට සරුංගල් අරින්න පුලුවන්.
அப்பே கெதர அய யன்னே. மாமாகே புதாத் யனவா.
அபட்ட சருங்கல் அரின்ன புலுவன்.
ரவி: **எமது வீட்டார்கள் போகிறார்கள். மாமாவின் மகனும் போகிறான். நாம் பட்டம் விடலாம்.**

කමල්: ඇයි අපට වැලි ගෙවල් හදන්නත් පුලුවන්නේ.
எய் அபட்ட வெலி கெவல் ஹதன்னத் புலுவன்னே.
கமல்: **ஏன் எங்களால் மணல் வீடுகள் கட்டவும் முடியுமே.**

: මම මගේ සරුංගලයත් අරගෙන එන්නම්.
மம மகே சருங்கலயத் அரகென என்னம்.
: **நான் என்னுடைய பட்டத்தையும் கொண்டு வருகிறேன்.**

රවි: ඔයාව අම්මා එවයි නේද?
ஒயாவ அம்மா எவய் நேத?
ரவி: **உன்னை அம்மா அனுப்புவார் தானே?**

කමල්: ඔව් රවි. ඔයාලා එක්ක එවනවා.
ஒவ் ரவி. ஒயாலா எக்க எவனவா.
கமல்: **ஆம் ரவி. உங்களோடு அனுப்புவார்.**

රවි: මම මගේ අම්මට කියන්නම් ඔයාගේ අම්මාට කියන්න කියලා.
மம மகே அம்மட்ட கியன்னம் ஒயாகே அம்மாட்ட கியன்ன கியலா.
ரவி: **உங்கள் அம்மாவுக்குச் சொல்லும்படி நான் எனது அம்மாவுக்குச் சொல்கிறேன்.**

කමල්: හොඳයි රවි.
ஹொந்தய் ரவி.
கமல்: **நல்லது ரவி.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ........... මොකද කරන්නේ?
2. මුහුදු .............. යනවා.
3. ..... ...... අරින්න පුලුවන්.




## Are எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லின் இறந்தகால வடிவம் 'were' என்பதாகும்

**'Are'** எனும் நிகழ்காலத் துணை வினைச்சொல்லைத் தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால தனி வாக்கியங்களையும், **'were'** எனும் இறந்தகால துணை வினைச்சொல்லைத் தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட இறந்தகால தனி வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) They are in the class now.
அவர்கள் இப்போது வகுப்பில் இருக்கிறார்கள்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஆ) They were at home yesterday.
அவர்கள் நேற்று வீட்டில் இருந்தார்கள்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ They are. (Present tense)
அவர்கள் இருக்கிறார்கள். (நிகழ்காலம்)

★ They were. (Past tense)
அவர்கள் இருந்தார்கள். (இறந்தகாலம்)

இ) The students are in the class.
மாணவர்கள் வகுப்பில் இருக்கின்றார்கள்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஈ) The students were in the library.
மாணவர்கள் நூலகத்தில் இருந்தார்கள்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ The students are. (Present tense)
மாணவர்கள் இருக்கிறார்கள். (நிகழ்காலம்)

★ The students were. (Past tense)
மாணவர்கள் இருந்தார்கள். (இறந்தகாலம்)

உ) The books are on the table.
புத்தகங்கள் மேசையில் இருக்கின்றன.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஊ) The books were in my bag.
புத்தகங்கள் எனது பையில் இருந்தன.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ The books are. (Present tense)
புத்தகங்கள் இருக்கின்றன. (நிகழ்காலம்)

★ The books were. (Past tense)
புத்தகங்கள் இருந்தன. (இறந்தகாலம்)

**குறிப்பு:** They are.
அவை இருக்கின்றன. (அஃறிணை)

★ They were.
அவை இருந்தன. (அஃறிணை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வெண்கலம்...

தெற்காசிய கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் மாலைதீவில் நடத்தப்பட்ட 5 ஆவது தெற்காசிய கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தை வெற்றி கொண்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. 'லீக்' முறையில் நடைபெற்ற இப்போட்டிகளில் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியீட்டிய இந்தியா தங்கப் பதக்கத்தையும், பங்களாதேஷ் வெள்ளிப் பதக்கத்தையும், இலங்கை வெண்கலப் பதக்கத்தையும் வெற்றி கொண்டன.



# எரங்கவிற்கு உதவும் வாஸ்...!

விதிமுறைக்கு மாறாக பந்து வீசுவதாக ஐசிசியின் தடைக்கு உள்ளாகியுள்ள இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஷமிந்த எரங்கவிற்கு பந்து வீச்சில் உரிய திருத்தங் களை செய்து சரியான விதத்தில் பந்து வீசுவதற்கான பயிற்சிகளை இலங்கையின் முன்னாள் வீரர் சமிந்த வாஸ் வழங்கியுள்ளார்.

இது குறித்து தெரிவித்துள்ள எரங்க ''வாஸ் எனது நல்ல நண்பர். எனது வேண்டு கோளுக்கிணங்க பந்து வீச்சில் திருத்தங்களை செய்வதற்கான பயிற்சிகளை வழங்க அவர் முன்வந்தார். கடந்த சில நாட்களாக அவரிடம் போதிய பயிற்சிகளைப் பெற்றேன். எனவே, எனக்குரிய மற்றுமொரு சோதனையை நடத்துமாறு ஐசிசி யிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது'' என தெரிவித்துள்ளார்.



# பயிற்றுனராக மஹேல

ஐபிஎல் வடிவிலான பங்களாதேஷ் பிரிமியர் லீக் (BPL) போட்டிகளில் கலந்துகொள்ளும் 'குல்னா டைடன்ஸ்' அணியின் பிரதான பயிற்றுனராக இலங்கையின் மஹேல ஜயவர்தன இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற மஹேல பங்களாதேஷ் BPL போட்டிகளில் 'டக்கா டைனமைட்ஸ்' அணிக்காக விளையாடியமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இம்முறை ஐபிஎல் செம்பியனாகிய மும்பாய் இந்தியன்ஸ் அணியின் பிரதான பயிற்றுனராக பணியாற்றியிருந்ததுடன், ஓர் அணியின் பிரதான பயிற்றுனராக மஹேல நியமிக்கப்பட்டுள்ளமை இது இரண்டாவது தடவையாகும். அடுத்த BPL போட்டிகள் நொவெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ICC CHAMPIONS TROPHY 2017

## போட்டி நிரல்

**பிரிவு A**
- அவுஸ்திரேலியா
- இங்கிலாந்து
- நியூஸிலாந்து
- பங்களாதேஷ்

**பிரிவு B**
- இந்தியா
- தென்னாபிரிக்கா
- இலங்கை
- பாகிஸ்தான்




| திகதி | பிரிவு | அணிகள் | வெற்றி அணி |
|---|---|---|---|
| ஜூன் 1 | A | இங்கிலாந்து - பங்களாதேஷ் | ........ |
| ஜூன் 2 | A | நியூஸிலாந்து - அவுஸ்திரேலியா | ........ |
| ஜூன் 3 | B | இலங்கை - தென்னாபிரிக்கா | ........ |
| ஜூன் 4 | B | இந்தியா - பாகிஸ்தான் | ........ |
| ஜூன் 5 | A | அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் | ........ |
| ஜூன் 6 | A | இங்கிலாந்து - நியூஸிலாந்து | ........ |
| ஜூன் 7 | B | பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா | ........ |
| ஜூன் 8 | B | இந்தியா - இலங்கை | ........ |
| ஜூன் 9 | A | நியூஸிலாந்து - பங்களாதேஷ் | ........ |
| ஜூன் 10 | A | இங்கிலாந்து - அவுஸ்திரேலியா | ........ |
| ஜூன் 11 | B | இந்தியா - தென்னாபிரிக்கா | ........ |
| ஜூன் 12 | B | இலங்கை - பாகிஸ்தான் | ........ |
| ஜூன் 14 | | 1 ஆம் அரையிறுதி (A1-B2) | ........ |
| ஜூன் 15 | | 2 ஆம் அரையிறுதி (A2-B1) | ........ |
| ஜூன் 18 | | இறுதிப் போட்டி | |

2017

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ச
# உருவ




பாடசாலை மாணவர்களுக்கான செயற்பாடுகளில், பாடசாலை சஞ்சிகை உருவாக்கத்திற்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. அச்சுத் தொழில்நுட்பத்திலும் பக்க வடிவமைப்பிலும் நவீன மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் பாடசாலை சஞ்சிகை ஒன்றை உருவாக்குவது என்பது மிகவும் இலகுவான பணியாக உள்ளது. எனினும், பாடசாலை சஞ்சிகை ஒன்றினை சரியான முறையில் தொகுப்பதில் பல குறைபாடுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு காரணம், ஒரு சஞ்சிகையை தொகுப்பதில் உள்ள தொழில்நுட்ப வசதிகள் மற்றும் படைப்பாற்றல் குறித்து காணப்படுகின்ற போதிய அறிவின்மை ஆகும். எனவே, பாடசாலை சஞ்சிகை தொகுப்பின்போது பின்பற்ற வேண்டிய தொழில்நுட்ப மற்றும் படைப்பாற்றல் நடைமுறைகள் குறித்து இங்கு நோக்குவோம்.

## பாடசாலை சஞ்சிகை என்பது...

ஆகக் கூடியது 16 பக்கங்களைக் கொண்டதாக A4 தாள்களை ஒன்றிணைத்துக் கட்டப்பட்ட அல்லது நடுவில் மடித்துக் கட்டப்பட்ட அச்சுப் பிரதியே பொதுவாக 'சஞ்சிகை' என்று அழைக்கப்படுகின்றது. உள்ளடக்கம், தொழில்நுட்பம், பக்கங்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் பாடசாலை சஞ்சிகைக்கும் பொதுவாக பயன்பாட்டிலுள்ள சஞ்சிகைகளுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. சஞ்சிகையின் உள்ளடக்கத்தில் பாடசாலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுதல், தொழில்நுட்ப நுணுக்கங்கள் பெருமளவு கையாளப்படாமை, குறைந்த பக்கங்கள் என்பன பாடசாலை சஞ்சிகையின் பொதுவான அம்சங்களாகும்.

## பாடசாலை சஞ்சிகையின் உள்ளடக்கம்

பாடசாலைக்குப் பொருத்தமான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமாகும். எந்தக் காரணத்திற்காக சஞ்சிகை வெளியிடப்படுகின்றது?, எந்த மாணவர் சங்கம் மற்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது?, வாசகர்கள் யாவர்? போன்ற காரணிகளுக்கமைய, பாடசாலை சஞ்சிகையின் உள்ளடக்க விடயங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். இதற்கமைய, பாடசாலை சஞ்சிகையின் நோக்கம் மற்றும் உள்ளடக்கம் என்பனவற்றை ஆசிரியர் குழாமே தீர்மானிக்க வேண்டும்.

## தொழில்நுட்பம்


பாடசாலை சஞ்சிகை தொகுப்பின்போது, உயர் அச்சு தொழில்நுட்ப முறைகள் மிக அரிதாகவே கையாளப்படுகின்றன. பொதுவாக, எளிமையான தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டே, பாடசாலை சஞ்சிகை தொகுக்கப்படுகின்றது. பாடசாலை சஞ்சிகைக்காக மிகவும் குறைந்தளவில் முதலீடு செய்யப்படுவதே இதற்கான காரணமாகும்.

## கடதாசி

சஞ்சிகை வெளியீட்டின்போது, நியூஸ் பிரின்ட் கடதாசி அல்லது வெண்ணிறக் கடதாசியைப் பயன்படுத்தலாம். வெண்ணிறக் கடதாசி பிரகாசமான நிறத்தினைக் கொண்டிருக்கும். நியூஸ் பிரின்ட் கடதாசி அவ்வாறானதாக இல்லை. மேலும் இதன் கனத்தன்மையும் குறைவாகும். விலை அதிகம் கொண்ட ஆர்ட் பேப்பரைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பாடசாலை சஞ்சிகைகளும் உள்ளன. அவற்றின் அச்சுப் பதிப்பு உயர் தரத்தில் காணப்படும்.

## முன் அட்டை

முன் அட்டை எப்படி இருக்க வேண்டும் என்பது பெரும்பாலும் சஞ்சிகை ஆசிரியர் குழாமின் முடிவாகவே அமையும். உதாரணமாக; நியூஸ் பிரின்ட் கடதாசியிலோ, வெண்ணிற அல்லது வர்ணக் கடதாசியிலோ முன் அட்டையை வடிவமைக்க முடியும்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ட் பேப்பர் அல்லது ஆர்ட் போர்ட் போன்றவற்றினால் அமைவதும் சிறப்பானதாகும். மேலும், சஞ்சிகைப் பக்கங்களின் எண்ணிக்கை அதிகம் எனின், முன் அட்டையை கனத்த கடதாசியினால் அமைப்பது பொருத்தமாக இருக்கும்.

## பாடசாலை சஞ்சிகையை நிறைவு செய்தல்

சஞ்சிகையொன்றில் உள்ளடக்கப்படுகின்ற தாள்களை

# ஞ்சிகையொன்றை ாக்குவோம்









ஒன்றிணைத்து அதனுடன் முன் அட்டையையும் சேர்த்துக் கட்டுவதன்மூலம் (க்ளிப் செய்வதன்மூலம்) சஞ்சிகையின் உருவாக்கப் பணி நிறைவடைகின்றது. தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சபையினூடாக, சர்வதேச சஞ்சிகை தர இலக்கத்தைப் (ISSN) பெற்று அதனை சஞ்சிகையில் சேர்க்கவும் முடியும்.

## ஆசிரியர் குழாம்

பாடசாலை சஞ்சிகைக்கு ஆசிரியர் குழாம் ஒன்று அவசிய மாகும். எழுத்தாற்றல் மிக்கவர்கள், சஞ்சிகையாக்கத்தில் ஆர்வம் உள்ளவர்கள், படைப்பாற்றல் திறமை உள்ளவர்கள் ஆசிரியர் குழாமில் இடம்பெறலாம்.

## மாதிரி வடிவம்

சஞ்சிகைக்கான மாதிரி வடிவத்தினை உருவாக்கிக் கொள்வது ஆசிரியர் குழாமின் பிரதான பணியாகும். இதனை 'டம்மி' என்று கூறுவர். A3 அளவிலான தாளில் டம்மியினை உருவாக்கிக்கொள்ளலாம். எவ்வளவு பக்கங்கள் சஞ்சிகையில் இணைக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர் குழாமே தீர்மானிக்க வேண்டும். A3 அளவிலான தாளை இரண்டாக மடிக்கும்போது நான்கு பக்கங்கள் உருவாகும். இதன்படி, எட்டு A3 தாள்களால் 32 பக்கங்களை உருவாக்க முடியும். டம்மியில் பென்சிலால்தான் குறிப்புகளை இட வேண்டும். ஏனெனில், அதில் அடிக்கடி மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்படலாம்.



## கணினிமயப்படுத்தப்பட்ட சஞ்சிகை

சஞ்சிகையின் மூலப் பிரதியினை டம்மிக்கு ஏற்றவாறு கணினி மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். இதற்காக எடோபி இன்டிசைன் அல்லது பப்ளிஷர் ஆகிய மென்பொருள்களைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் அழகிய பக்க வடிவமைப்பு களைப் பெற முடியும். அவ்வாறே, பலதரப்பட்ட எழுத்துருக்களையும் பயன்படுத்தலாம்.

பாடசாலை சஞ்சிகையை கணினிமயப் படுத்திக்கொண்டோமே ஆயின், சஞ்சிகையின் அச்சுப் பதிப்பிற்குத் தேவையான செலவினத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

கணினிமயப்படுத்தும்போது அந்தந்தப் பக்கங்களில் உள்ளடங்குபவை, மொழிப்பிரயோகம் என்பன சரியாக உள்ளடக்கப் பட்டுள்ளனவா?, பக்க வடிவமைப்பு கவரும் விதத்தில் உள்ளதா? என்று சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

## அனுமதி பெறல்

சிறந்த முறையில் திட்டமிடல்களை மேற்கொண்டு உருவாக்கிய சஞ்சிகையை பாடசாலை அதிபரின் அனுமதிக்காக சமர்ப் பிப்பது அவசியமாகும். மேலும், பாடசாலை ஆசிரியர்களிடமும் சஞ்சிகையை சமர்ப்பிக்க லாம். ஏனெனில், எவ்வளவுதான் திருத்தங்கள் செய்தாலும் பாடசாலை சஞ்சிகையில் ஆசிரியர் குழாமின் கண்ணுக்குத் தெரியாத சில பிழைகளும் இருக்கக்கூடும். இவ்வாறு சமர்ப்பிப்பதன்மூலம் பிழைகளை திருத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## செலவு குறைந்த பாடசாலை சஞ்சிகை

பாடசாலை சஞ்சிகை ஒன்றை தயாரிக்கும் அனுபவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்துடன், அதற்கான செலவினத்தினை குறைத்துக்கொள்வதும் அவசியமாகும். பாடசாலை சஞ்சிகையை குறைந்த செலவில் உருவாக்கிக்கொள்வதற்காக, பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர்களின் ஆலோசனை களைப் பெற்றுக் கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசம் மாளிகை










அப்புத்தளை நகரில் இருந்து சுமார் ஏழு கிலோமீற்றர் தூரம் சென்றதும் எடிசம் துறவற இல்லத்திற்கு செல்லும் கிளைப்பாதையை அடையலாம். ஹோர்ட்டன் சமவெளி மற்றும் நுவரெலியா போன்ற பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் எமக்கு பார்வையிட வேண்டிய முக்கிய இடம்தான் இந்த எடிசம் மாளிகை ஆகும்.


**1887** ஆம் ஆண்டில் 'தோமஸ் லெஸ்டர் விலர்ஸ்' என்பவராலேயே இந்த எடிசம் மாளிகை நிர்மாணிக்கப்பட்டது. இங்கிலாந்தின் ஸ்கொட்லாந்தில் உள்ள கென்ட் மாநிலத்தில் எடிசம் எனப்படும் கிராமத்தில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்து வந்த பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளரான இவர் ஒரு வெள்ளை இனத்தவராவார்.

**1927** ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு **1931** இல் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட இந்த பங்களா, வெள்ளைக்கார கொத்தனார்கள் (பொறியியலாளர்கள்) மற்றும் இந்திய வம்சாவளி பெருந்தோட்டத் தொழிலாளர் ஆகியோரால் இணைந்து முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.










**1948-1951** காலப்பகுதியில் சேதவத்த நிறுவனத்திற்கு விற்கப்பட்ட இந்த மாளிகை அதன்பின்னர் விமலா விஜேவர்தன என்ற பெண்மணிக்கு உரித்தானது. பின் **1951** முதல் உரோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பெனடிக்கன் குருத்துவ சபைக்குரிய துறவற இல்லமாக தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றது.

இம்மாளிகையை அமைப்பதற்காக கருங்கற்கள் மற்றும் மரங்கள் அனைத்தும் இங்கிலாந்தில் இருந்து கொண்டு வரப்பட்டதோடு, இக்கட்டடத்தின் கூரை டியூடர்-ஜெக்கடீன் எனும் கட்டடக்கலை முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கூரை பர்மிய தேக்கு மரங்களால் சீலிங் செய்யப்பட்டுள்ளது.

(-அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர்பாடலை ஸ்தம்பிக்கச் செய்த சூரியத் தீப்பிழம்பு


வானொலி கேட்பது சீனர்களின் அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாகும். இதில் தென் சீன மக்கள் எதிர்பாராத விதமாக புதுவிதமான ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுத்தனர். அன்றும் அவர்கள் வழமைபோல் வானொலியை செவிமடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால், திடீரென வானொலி ஒலிபரப்பைக் கேட்கமுடியாமல் போய்விட்டது. பல மாகாணங்களிலும் இவ்வாறு வானொலி ஒலிபரப்பு ஸ்தம்பித்தது.

## திடீர் ஸ்தம்பிதம்

லட்சக்கணக்கான மக்கள் வானொலியை செவிமடுத்துக் கொண்டிருக்கையில் திடீரென அனைத்து வானொலி அலைவரிசைகளும் ஒன்றாக இயங்க மறுத்து அமைதி அடைந்தன. இதனையடுத்து பெரும்பாலானோர் தொலைபேசி மூலம் வானொலி நிலையத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்ய முயன்றபோது, தொலைபேசிகளும் இயங்கவில்லை. அவை அனைத்தும் செயலிழந்து இருந்தன. தொலைபேசிக் கோபுரங்களில் சமிக்ஞைகள் கிடைக்கவில்லை. இணையத்தள மற்றும் கணினி நடவடிக்கைகளுக்கும் இவ்வாறே பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அதுமாத்திரமல்ல பல பிரதேசங்களில் மின்சார விநியோகங்களும் தடைப்பட்டன.

## தாக்கம்

பின்னர் இது சீனாவில் மாத்திரம் நடந்த ஒரு நிகழ்வல்ல என்றும் இதேபோல் உலகில் பல நாடுகளில் வானொலி அலை வரிசைகள், தொலைதொடர்பு சாதனங்கள், சமிக்ஞைகள் அனைத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டன என்ற செய்திகள் வெளிவந்தன. அவற்றின் செயற்பாடுகள் சிறிது நேரம் தடைப்பட்டதும் தெரியவந்தது. புவிச் சுற்றுப்பாதையில் தங்கியுள்ள தொடர்பாடல் செய்மதிகளின் செயற்பாடுகள் கூட இதன்போது பாதிப்படைந்தன. இத்தடைகள் அனைத்தும் மிகவும் குறுகிய நேரம் மாத்திரமே நடந்தது. எனினும் சிறிது நேரத்தின் பின் அனைத்தும் வழமைக்குத் திரும்பின. எனினும் ''என்ன நடந்தது?'' என எல்லோரும் ஒருவரை ஒருவர் வினவ ஆரம்பித்தனர். அனைவரதும் அவதானம் இது குறித்தே குவிந்திருந்தது. நடந்தது என்ன என்பது குறித்து அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனமே முதன்முதலாக விளக்கமளிக்க முன்வந்தது.





## சூரியச் சூறாவளி

இவை அனைத்தும் பிரபஞ்சத்தில் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவால் நிகழ்ந்த பாதிப்பே என நாஸா அதிகாரிகள் தெரிவித்தனர். புவியில் இருந்து 150 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நட்சத்திரத்தில் நிகழ்ந்த ஒரு வெடிப்பும் அதிலிருந்து வெளியேறிய மின்காந்தச் சூறாவளியுமே இந்த சம்பவத்திற்கு காரணம் என நாஸா அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நட்சத்திரம் வேறேதும் இல்லை, எமது சூரியன்தான். அண்மையில் எமது சூரியனில் அதிசக்திவாய்ந்த வெடிப்பொன்று நிகழ்ந்தது. விஞ்ஞானிகள் அதனை சூரிய வெடிப்பு என அழைக்கின்றனர். அந்த வெடிப்புடன் சூரியனில் இருந்து தீப்பிழம்பு வெளிப்பட்டது. அந்தத் தீப்பிழம்பு வெளிப்பட்டதோடு, ஆரம்பித்த புவிக்காந்த விண்வெளிச் சூறாவளியானது, பூமியை நோக்கி வேகமாக வீசியது. விண் எங்கும் பரவிய அந்தச் சூறாவளியுடன் வந்த கதிர்வீச்சின் காரணமாகவே, புவியின் தொடர்பாடல் நடவடிக்கைகள், செய்திப்பரிமாற்றச் செயற்பாடுகள், மின் விநியோகத் தடை என பல பாதிப்புகள் ஏற்பட்டன.

இது துணுக்குகளால் நிறைந்த கதிர்ச் சூறாவளியாகும். இதனை வெறுங் கண்களால் பார்க்க முடியாது. இதன் தாக்கமே புவியின் ஒரு பகுதியை சிறிது நேரம் இவ்வாறு ஸ்தம்பிக்கச் செய்தது.

(-அ)



noolaham.org | aavanaham.org

# இலட்சினைகள் சில....

இலங்கை மின்சார சபை
Ceylon Eletricity Bord

இலங்கை போக்குவரத்து சபை
Srilanka Trans Board

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
National Water Supply and Drainage Board

இலங்கை தபால் திணைக்களம்
Srilanka Postal Department

இலங்கை துறைமுக அதிகார சபை
Srilanka Ports Authority

புகையிரத திணைக்களம்
Railway Department

முதலீட்டு ஊக்குவிப்பு சபை
Board of Investments

பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
Petroliam Corporation

# நேபாளம்

ஆசியாவில் அமைந்துள்ள நேபாளம் 1768ஆம் ஆண்டு முதல் ஒரு முடியாட்சிக்குரிய நாடாகத் திகழ்ந்தது. 1951 இல் இந்த ஆட்சி முறை நீக்கப்பட்டு நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறை நிறுவப்பட்டது. 2008 ஆம் ஆண்டு குடியரசானது. சார்க் வலய நாடுகளில் அங்கம் வகிக்கின்றது



125 இற்கும் மேற்பட்ட பல்வேறு பாரம்பரிய இனக்குழுக்கள் இங்கு வாழ்கின்றனர்.

**தேசிய பறவையும் மலரும்**

தேசிய மலர் - ரோடோடென்ட்ரோன் மலர்
தேசிய பறவை - டன்ஃபே எனும் காட்டுக்கோழி

**இனங்கள்**: 46.7% காஸ் முஸ்லிம் உள்ளிட்ட 125 வகையான இனக்குழுக்கள்; 5% நேவார்; 5.8% டமாங்க்; 6.6% தரு; 7.1% மகர்; 12.2% பிராமணர், மலையகம்; 16.6% வெற்றி

**மொழி**: நேபாள மொழி (உத்தியோகபூர்வ) 44.6%. 123 பிரதேச மொழிகள் உள்ளன

**சமயம்**: இந்து 81.3%, பௌத்தம் 9%, முஸ்லீம் 4.4%, கிராண்ட் 3.1%, கிறிஸ்தவம் 1.4%, ஏனையவை 0.7%

**அரசியல்**



நாடாளுமன்றக் கட்டடம்.



ஜனாதிபதி பித்யாதேவி பாண்டாரி

**இயற்கை வளம்** லிக்னைட், செம்பு, கோபோல்ட், இரும்பு.

நாணயம் நேபாள ரூபாய்

இறுதி மன்னராகிய கயேந்திர மன்னர் (2001-2008)

முதல் மன்னராகிய பிருதவி நாராயன் ஷா மன்னர். (1723-1775)




**தலைநகரமும் பெரிய நகரமும்**

நேபாளத்தில் அமைந்துள்ள ஒரு செம்புச் சுரங்கம்.

இமயமலையும் எவரெஸ்ட் சிகரமும் இங்குதான் அமைந்துள்ளது.

சிறுவர் தொழிலாளர்கள் இங்கு பாரிய பிரச்சினையாக உள்ளது.

தரம் வாய்ந்த சணல் உற்பத்திகளுக்கும் பயணப் பை உற்பத்திகளுக்கும் புகழ் பெற்ற நாடு.



பாரம்பரிய உடை.

பிரேந்திர மன்னர் (1972-2001) உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் 2001 இல் கூட்டாக கொலை செய்யப்பட்டனர்.

நேபாள இந்துக்களைக் கொண்ட உயர் குலத்தவர்கள் மேலாக கருதப்படுகின்றனர்.

சீர்கேடான பாதைகளின் காரணமாக, மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியான மாவோவாத கெரில்லாக்கள் இங்கு கிளர்ச்சியை தோற்றுவித்துள்ளனர்.

**லும்பினி**

லும்பினி வழிபாட்டுத் தலம் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்த இடம்.

கௌதம புத்தர் அவதரித்த இடமாக கருதப்படும் லும்பினி பூங்கா நேபாளத்திலேயே அமைந்துள்ளது.

பாரம்பரிய நடனம்

நெல், காய்கறிகள், பழங்கள் முக்கிய பயிர்ச் செய்கையாகும். கரும்பும் புகையிலையும்கூட பரவலாக பயிரிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** மோட்டார் வாகனங்களில் மேலதிகமாக பெட்ரோலை எடுத்துச் செல்லும் போது பிளாஸ்டிக் கொள்கலன்களில் எடுத்துச் செல்லக் கூடாது என்றும், உலோகக் கொள்கலன்கள்தான் பொருத்தமானவை என்றும் கூறப்படுவது ஏன்?

**பதில்:** பெட்ரோலும், டீசலும் விரைவாகத் தீப்பற்றும் தன்மை கொண்டவை. வாகனம் ஓடும்போது என்ஜின் மட்டுமன்றி இதர பாகங்களும் சூடாகக் கூடும். இதனால் எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படும் போது பிளாஸ்டிக் கொள்கலன் வெடித்து அதிலுள்ள பெட்ரோல் அல்லது டீசல் சிதறும் வாய்ப்புகள் அதிகமாகும். மோதலின்போது, ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பு, இவ்வாறு சிதறும் பெட்ரோல் அல்லது டீசலில் தீப்பற்றக் காரணமாக, அமைகின்றது. இதனால்தான் உலோகக் கொள்கலன்கள் பாதுகாப்பானவை என்று கூறப்படுகின்றது.




# ஏன்? எப்படி?

**கேள்வி: காய்கறிகள் மற்றும் கீரைவகைகளில் இளம் பச்சை நிறக் காய்கறிகளை விட, கடும் பச்சை நிறக் காய்கறிகளே உடலுக்கு நன்மை தருபவை என்று கூறப்படுவது ஏன்?**

**பதில்:** கடும் பச்சை நிறத்திலான காய்கறிகளில் கெரட்னொயிட், இரும்பு மற்றும் விற்றமின் பி, போலிக் அசிட் என்பன அடங்கியுள்ளன. இவை எமது உடலின் செயற்பாட்டிற்கு அவசியமானவை. இதனால் இவை அடங்கியுள்ள காய்கறிகள், கீரைகள், கடும் பச்சை நிறக் காய்கறிகள் என்பனவற்றை உட்கொள்வது நன்மை தரும்.






சினிமா உலகின் முதல் டிஜிட்டல் திரைப்படம் எது?

Star Wars

உலகில் முதலாவது 3D தொலைக்காட்சி சேவை எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

பிரித்தானியாவில்




# தெரிந்து கொள்வோம்



Computer Mouse ஐக் கண்டுபிடித்தவர் யார்?

டக்ளஸ் எங்கெல்பார்ட்

2022 ஆம் ஆண்டுக்கான உலக கால்பந்தாட்டம் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

கட்டார்

qatar 2022



உலக அரசியலில் எந்த நாட்டில் அதிகளவான அமைச்சர்களை கொண்ட நாடாளுமன்றம் உள்ளது?

சீனா


'விஜய்' பத்திரிகையை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள

| | 1 வருடத்திற்கு | 6 மாதங்களுக்கு |
|---|---|---|
| கொழும்பு | ரூ 624/= | ரூ 312/= |
| கொழும்புக்கு வெளியே (தபாலில்) | ரூ 1128/= | ரூ 564/= |

சந்தா செலுத்தும் முறை:

- நேரடியாக செலுத்த முகவரி:- Subscription Division, Wijeya Newspapers Ltd. No-08, Hunupitiya Cross Rd, Colombo-02
- காசுக்கட்டளை (Money Order):- பெறுபவர் பெயருக்கு Slave island post office என குறிப்பிட்டு குறித்த காசுக்கட்டளை பட்டியலை பதிவுத் தபாலில் அனுப்பவும்.
- காசோலை (check):- Wijeya Newspapers என்ற பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: (பதிவுத் தபாலில்) - Subscription Manager, Tamil Vijei No-08, Hunupitiya Cross Rd, Colombo-02,

தொ.பே.இல:- 011-2479626, 0773710291

விஜய் பத்திரிகையை 20% விலைக்கழிவுடன் சந்தா முறையில் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கள்ளிகள்'

வறண்ட நிலப்பகுதிகள் மற்றும் பாலைவனங்களில் வளரக்கூடிய தாவர இனம்தான் 'கள்ளி' (cactus) ஆகும். கள்ளிச் செடிகள் சுமார் 200 வருடங்கள் வரை வாழ்கின்றன. இதில் பல வகைகள் உள்ளன.

இந்த செடிகளில் இலைகள் இல்லை. இதனால், இவற்றின் தண்டுப் பகுதியில்தான் உணவுத் தயாரிப்பு இடம்பெறுகின்றது.

# பற்தூரிகையின் பாவனைக் காலம்



பற்கள் மற்றும் வாய் சுத்தம் பேண பற்தூரிகைகள் உதவுகின்றன. அந்தவகையில், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பற்தூரிகையை மாற்றிக்கொள்வது சிறந்தது என்பதே பெரும்பாலான பல் வைத்திய நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

இது தவிர, இடைப்பட்ட காலத்தில் பற்தூரிகையில் பல் துலக்கும் பகுதியிலுள்ள தூரிகைகள் தேய்ந்துவிட்டாலோ அல்லது பற்தூரிகையின் கைப்பிடி வளைந்துவிட்டாலோ புதிய பற்தூரிகையை பயன்படுத்துவதே சிறந்ததாகும். ஏனெனில், தூரிகைகள் வலுவற்றதாக இருந்தால், பற்களில் படிந்துள்ள கறைகள் மற்றும் பற்களுக்கிடையில் சிக்கியுள்ள உணவுத்துகள்களை சரிவர அப்புறப்படுத்த முடியாமல் போகும். இதனால், பற்கள் மற்றும் வாய் சுத்தம் பாதிக்கப்பட்டு பல் சம்பந்தமான நோய்கள் ஏற்படக்கூடும்.

'தூரிகைகள் வலுவற்றதாக இருந்தால், பற்களில் படிந்துள்ள கறைகளை சரிவர அப்புறப்படுத்த முடியாமல் போகும். இதனால், பல் சம்பந்தமான நோய்கள் ஏற்படக்கூடும்'



# உடல் கழிவுகள் சீராக வெளியேற...



எமது உடற் செயற்பாட்டின்போது, வெளியேறும் கழிவுகளை வியர்வை, சிறுநீர், மலம் என மூன்று வகைப்படுத்தலாம். இந்த மூன்றும் சீராக வெளியேறினால்தான் எமது உடல் ஆரோக்கியமாக இருக்கும். இவற்றின் வெளியேற்றம் வழமையைவிடக் கூடினாலோ அல்லது குறைந்தாலோ அது ஏதேனுமொரு நோய்க்குரிய அறிகுறியாகத்தான் இருக்கும். எனவே, உடல் கழிவுகள் சீராக வெளியேற வேண்டுமானால் போதியளவு நீர் அருந்துதல், பழங்கள் மற்றும் காய்கறிகளை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளல், உடற்பயிற்சி செய்தல், எண்ணெய் மற்றும் அதிக கொழுப்பு உணவுகளை தவிர்த்தல் போன்ற விடயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# அதிக வெப்பம் நிலவும் பாலைவனம்



தென்கிழக்கு ஈரானில் அமைந்துள்ள 'லூத் பாலைவனம்' (Loot Desert), உலகில் அதிக வெப்பம் நிலவும் பாலைவனமாக கருதப்படுகின்றது. இந்த பாலைவனத்தின் மேற்பரப்பு மணல் வெப்பநிலையை அளவிட்டதில் அதிகபட்சமாக $70^{o}$ செல்சியஸ் எனப் பதிவாகியுள்ளது.



இதனால் இந்தப் பாலைவனமானது, உலகின் வறண்ட மற்றும் வெப்பம் கூடிய இடங்களில் ஒன்றாகவும் குறிப்பிடப்படுகின்றது.

51,800 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் பரந்துள்ள இந்த பாலைவனம் 'உப்பு பாலைவனம்' என்றும் அழைக்கப்படுகின்றது. காரணம், இந்த பாலைவனத்தின் கிழக்குப் பகுதி உப்பு அடுக்குகளைக் கொண்ட நிலமாக காணப்படுகின்றமையே ஆகும்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, ஜூன் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 07 , 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org